எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், 110, அண்ணா சாலை, சென்னை–2.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: முனைவர்.சி.பாலசுப்பிரமணியன், இணை இயக்குநர் (பொ)

ஆணையரக செ.மு.ஆணை எண்.இ3/6968/2021 நாள்: 28.06.2022

பொருள்: பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை–2 – கருணை அடிப்படையில் திரு.டி.இ.கோகுல்கிஷோர், இளநிலை உதவியாளராக பணி நியமனம் – 03.03.2021 அன்று முற்பகல் பணியேற்றது – தனியரின் பணியினை இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 03.03.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசாணை பெறப்பட்டுள்ளது – 03.03.2021 முற்பகல் முதல் இரண்டாண்டுகால தகுதிகாண் பருவ காலத்தில் வைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. ஆணையரக செ.மு.ஆணை எண். பி1/32241/2019, நாள்: 25.02.2021.
2. ஆணையரக செ.மு.ஆணை எண்.இ3/6968/2021, நாள் 03.03.2021.
3. ஆணையரக கடித எண்.இ3/6968/2021, நாள் 20.04.2022.
4. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (எம்)த் துறை, நாள் 01.08.2018.
5. அரசாணை (4ப) எண்.3, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எஅ1–2)த் துறை, நாள் 02.06.2022.

-----

*ஆணை:*

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையைச் சார்ந்த அரசு மைய அச்சகம், சென்னை–1ல் தேர்வுநிலை இளநிலை புத்தகம் கட்டுநராகப் பணிபுரிந்து 30.06.2019 பிற்பகல் மருத்துவ இயலாமை ஓய்வில் சென்ற திருமதி.என்.தேவி, என்பவரின் வாரிசுதாரரான மகன் திரு.டி.இ.கோகுல்கிஷோர் என்பவர் இளநிலை உதவியாளர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் வயதுத் தகுதி அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளதைத் தொடர்ந்து, தனியரை கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து பார்வை 1–ல் காணும் 25.02.2021 நாளிட்ட ஆணையரக செயல்முறை ஆணையில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை–2ல் (தற்போது அரசு மைய அச்சகம், சென்னை–1) பணியமர்த்தி ஆணையிடப்பட்டது.

2) மேற்காணும் ஆணையின்படி, தனியர் 03.03.2021 அன்று பணியில் சேர அனுமதி கோரியதைத் தொடர்ந்து, பார்வை 2–ல் காணும் 03.03.2021 நாளிட்ட ஆணையரக செயல்முறை ஆணையில், தனியரை ஆணையரகம், சென்னை–2ல் 'சி' பிரிவில் காலியாக உள்ள பணியிடத்தில் பணியமர்த்தி ஆணையிடப்பட்டது. இதன்படி தனியர், இளநிலை உதவியாளர் பதவியில் ஆணையரகம், சென்னை–2–ல் 03.03.2021 முற்பகல் (தற்போது அரசு மைய அச்சகம், சென்னை–1) பணியேற்பு செய்துள்ளார்.

3) கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்பு செய்த நாளான 03.03.2021 மு.ப. தனியரது பணியினை வரன்முறை செய்து அரசின் ஆணை பெற்று வழங்க கோரி பார்வை 3–ல் காணும் 20.04.2022 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

4) பார்வை 5–ல் காணும் 02.06.2021 நாளிட்ட அரசாணை (4ப)எண்.3, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எ.அ.1–2)த் துறை நாள் 02.06.2021–ல், நாளிட்ட அரசாணையில், அரசாணை (நிலை)எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(M)த் துறை நாள் 01.08.2018ல், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை, வரன்முறை செய்வது குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது என்றும், எனவே எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.டி.இ.கோகுல்கிஷோர், என்பவரின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தனியர் பணியில் சேர்ந்த நாளான 03.03.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்குரிய உடல் தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள் மற்றும் நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெற தனியர் தகுதியுடையவர் ஆகிறார் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

5) தனியர், இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த 03.03.2021 அன்று உடல் தகுதி குறித்த மருத்துவ தகுதி சான்றிதழினை சமர்ப்பித்துள்ளார். தனியர் சமர்ப்பித்துள்ள மருத்துவச் சான்றிதழின்படி, தனியர் அரசுப்பணியில் சேர்வதற்கான உடல் தகுதியை பெற்றிருந்தார்.

6) பார்வை 5–ல் காணும் 02.06.2021 நாளிட்ட அரசாணை (4ப)எண்.3, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எ.அ.1–2)த் துறை, நாள் 02.06.2021–ன்படி, திரு.டி.இ.கோகுல்கிஷோர், தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாளான 03.03.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்தும், அந்நாள் முதல் இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

7) தனியர், மேற்படி இரண்டாண்டு கால தகுதிகாண் பருவகாலத்தை தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் நிறைவு செய்ய வேண்டும் என்றும் தகுதிகாண் பருவ காலத்தில், ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர்கள் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு, தேர்ச்சி பெற வேண்டும் என்றும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

8) தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–1க்கு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

சி.பாலசுப்பிரமணியன்,
இணை இயக்குநர் (பொ).

பெறுநர்

திரு.டி.இ.கோகுல்கிஷோர்,
இளநிலை உதவியாளர்,
அரசு மைய அச்சகம்,
சென்னை–1. (இணைப்பு அரசாணை (4ப)எண்.3, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (எ.அ.1–2)த் துறை, நாள் 02.06.2022) பணிமேலாளர் மூலமாக

நகல் பெறுநர்

1) பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–1.
2) சம்பள கணக்கு அலுவலர், சம்பள கணக்கு அலுவலகம் (வடக்கு) சென்னை–1.
3) கண்காணிப்பாளர் 'இ' பிரிவு/ இ4 உதவியாளர் இயக்ககம், சென்னை–2.

நகல் இடம்பெறல்

1. ஆணையர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக
2. இணை இயக்குநர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

ஆணையரின் நேர்முக உதவியாளர்.

ஆணையரின் நேர்முக உதவியாளர்
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம்
110, அண்ணாசாலை, சென்னை-600 002

5.7.2022